# தமிழகத்தில் தவ்வை என்ற மூத்த தேவி வழிபாடு பற்றி ஓர் ஆய்வு

**முனைவர் C. கலாராணி**
உதவிபேராசிரியர் வரலாற்று துறை
NMSS.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி (தன்னாட்சி), மதுரை

**முன்னுரை**:

தமிழகத்தில் கிடைத்த பெண் தெய்வ வழிவாட்டில் முதன்மையான ஆதாரமாக திருவண்ணாமலை மாவட்டத்திலும விழுப்புரம் மாவட்டத்திலும் காலத்தால் முந்திய “தாய் வழிபாட்டுச் சின்னாம்” கண்டறியப்பட்டு அடையாபபடுத்தப்பட்டுள்ளன. அவைகள் முழு பெண் உருவத்தை பிரதிபலிக்காவிட்டாலும் பெண்ணைப் போன்ற தோற்றத்தில் இவ்விரு சின்னங்களுக்கு அடுத்தபடியாக தாய் தெய்வ வழிபாட்டு சின்னம் கிடைத்திருக்கென்றால் அவை தவ்வை என்ற மூத்த தேவி சிற்பங்களே ஆகும். தமிழகத்தில் பல்வேறு இடங்களில் தவ்வை சிற்பங்கள் கண்டறயிப்பட்டள்ளன. அவற்றில் சிலவற்றை இங்கு காண உள்ளோம்.

**இலக்கியங்களில் தவ்வை**:

**“வேதாளம் சேருமே வெள்ளெருக்குப்**
**பூக்குமே**
**பாதாளமூலி படருமே - மூதேவி**
**சென்றிருந்து வாட்வளே சேடன்**
**குடிபுகுமே**
**மன்றோரம் சொன்னார் மனை”**
**“மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான**

என்று தவ்வை என்ற மூதேவி பற்றி ஔவையார் தம் பாடலிலி பாடியுள்ளார்.

**“மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்**
**தாளுனான் தாமரையி னாள்”**

என்ற குறளில் திருவள்ளுவர் தவ்வை என்ற மாமுகடி பற்றி கூறியுள்ளார்.

**“கேட்டிரே நம்பிமீர்காள் கெருட வாகனனும் நிற்க**
**சேட்டை தன் மடியகத்துச செல்வம் பார்த்திருக்கின்றீரே”**

என்று பொய்கையாழ்வார் தவ்வை என்ற சேட்டை பற்றி பாடியுள்ளார்.

**தாய்தெய்வ வழிபாட்டில் தவ்வை:**

நமது தமிழகமானது ஒரு ஆன்மீகபீமி, இங்கு பலவிதமான மத வழகாடுகள் ஈருந்து வருகின்றது. ஆரம்ப காலங்களில் சைவம், வைணவம், கானாபத்யம், கௌமாரம், சாக்தம், ஆசீவகம், சமணம், பௌத்தம் போன்ற மதவழிபாடுகள் சிறப்புற்று இரந்துது. ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் சமணம், பௌத்தம், நஞகளாக மற்ற அனைத்து சமயங்களும் ஒன்றிணைந்து இந்து மதம் என்று வழங்கி வருகிறது.

ஒரு குழந்தைக்கு அன்னையின் அன்பும் அரவணைப்பும் எவ்வளவு முக்கியமோ, அதனைப் போன்று நமது முன்னோர்களுக்கு தாய்தெய்வ வழபாடு என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாக இருந்து வந்துள்ள்து. தாய் தெய்வ வழிபாடு என்பது தவ்வை என்ற மூத்த தேவி, கொற்றவை, விநாயகி, சப்த மாதர்கள் ஆகியோர்களைக் குறிக்கும் இவற்றில் முதலில் தோன்றிய தவ்வையைப் பற்றி இங்கு விரிவாகக் காண்போம்.

ஆரம்ப காலத்தில் தமிழகத்தை இருபெரும் பேரரசர்கள் சிறப்பான முறையில் ஆட்சி செய்து வந்துள்ளனர். அவற்றில் வட தமிழகத்தை பல்லவர்களம் தென் தமிழகத்தை பாண்டியர்களும் ஆட்சி வந்தனர். இவ்விரு பேரரசுகளும் தாய் தெய்வ வழபாட்டை சிறப்பான முறையில் கொண்டாடி வந்துள்ளனர். குறிப்பாக பல்லவஅரசர்கள் கண்ணில் கண்ட கற்களை எல்லாம் சிறபங்களாகவும் பெரிய குன்றுகளையெல்லாம் கடைவரைகளாக மாற்றி இறை வழபாட்டை ஊக்குவித்து வந்துள்ளனர். இவற்றில் பெரும்பாலான குடைவரைகளம் கோவில்களும்(கற்றளி) சைவக் கடவுளான

சிவனுக்காகவே படைக்கப்பட்டன. இக்குடைவரைகளிலும் கற்றளி கோவில்களிலும் முக்கிய சிற்பங்களக விநாயகர், முருகன், திருமால், தவவை, தொற்றவை போன்ற சிற்பங்களை அதிகமாக செகுக்கிவைத்து வழிபட்டு வந்துள்ளனர். சைவ வழபாட்டிற்குப் பிறகு தாய் தெய்வவழபாட்டிற்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். இதற்கு சிறந்த உதாரணம் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள த.மோட்டூரில் உள்ள தாய் தெய்வ வழிபாட்டுச் சின்னம் ஆகும், மேலும் இதே போன்ற தாய் தெயவ வழபாட்டு சின்னம் விழுப்புரம் மாவட்டத்திலும் ஒன்று உள்ளதும் கவனிக்கத்தக்கதாகும்.

**தவ்வை என்ற மூத்ததேவி**:

மேற்கூறிய தாய் தெய் வழிபாட்டு சின்னங்களுக்கு அடுத்தபடியாக தோன்றிய தாய் தெய்வ உருவ வழிபாடு தவ்வை வழிபாடு ஆகும். ஆரம்பகாலம் முதலே தவ்வை வழிபாடு இருந்து வந்தாலும் நமக்கு கிடைத்த ஆதாரங்களின் அடிக்படையில் பொதுயுகம் 5ம் நூற்றாண்டு மற்றும் 6ம் நூற்றாண்டு தவ்வை சிற்பங்கள்தான் நமக்கு ஆதாரங்களாக கிடைத்தள்ளது. இதற்கு சிறந்த ஊதாரணமாக விழுப்புரம் மாவட்டத்தில் செஞ்சிக்கு அருகில் உள்ள மேல ஓலக்கூர் என்ற கிராமத்தில் கிடைத்துள்ள தவ்டவை சிற்பமே மிகவம் பழமையதன சிற்பமாகும். இந்த சிற்பமானது அவ்வுரின் அரசுப்பள்கிக்கு எதிரில் அமைந்துள்ளது. இந்த சிற்பம் இன்றளவும் வழிபாட்டில் இருந்து வருகிறது. முதலில் தோன்றிய தேவி என்பதால் மூத்த தேவி என்றும் வடமொழியில் ஷேஸ்டா் தேவி என்றும் அழைக்கப்படுகிறாள். மேலும் தவ்வைக்கு தூமாதேவி, மூதேவி, முகடி, மாமுகடி போன்ற பெயா்களிலும் வழிபடக்கூடியவா் ஆவாா்.

மேலஓலக்கூரில் காணப்படும் தவ்வை சிற்பமானது மூன்றடி உயரமும் நான்கு அடி அகலமும் கொண்ட பல்கைக் கல்லில் காணப்படுகிறது. சிற்பத்தின் வலதுபுறம் மகள் மாந்தியும் இடது புறம் மகன் மாந்தனும் காணப்படுகின்றனா். மாந்தனின் கையில் தனது தாயின் ஆயுதமான துடைப்பம் இடம்பெற்றுள்ளது.

தவ்வையின் தலையின் வலதுபுறம் இவரின் வாகனமான காகம் காணப்படுகிறது. தவ்வை பெருத்த வயிறுடன் காண்படுகிறார். பெரும்பாலான தவ்வை சிற்பங்கள் மகன், மகளுடனேயே காணப்படுகிறாா். தவ்வை மட்டும் இருக்கும் தனிச்சிற்பமானது திண்டிவணத்திற்கு அருகில் உள்ள ஆலகிரிாமத்திலும், ஆற்காடு அருகில் திருமலைச்சேரி என்ற கிராமத்திலும் காணப்படுகிறது.

**தவ்வையும் செழுமையும்**:

பொதுவாக தவ்வையின் சிற்பமானது செழுமையின் அடையாளமாக பாா்க்கப்படுகிறது. தவ்வை தாய் விவசாயத்திற்கும், செழுமைக்கும், மக்கள் செல்வத்திற்கும் அதிபதிகாக போள்ளப்படுகறாா். ஆரம்பகாலத்தில் திருமணமான புதுமன தம்பதிகள் தவ்வை கோலிலுக்குச் சென்று வணங்கிவந்துள்ளனா். இவரை வணங்கிவந்தால் செல்வ வளமும், குழந்தை பேரும் கிடைக்கும் என்பது நம்பிக்கையாக இருந்து வந்துள்ளது. ஆரம்ப காலத்தில் இவரின் கோவில்கள் பொதுவாக நீா்லைகளின் ஓரமாகவே கோவில் கட்டி வழிபட்டு வந்தள்ளனா். இன்றளவும் புதிதாக கண்டறியக்கூடிய தவ்வை சிற்பங்கள் கிடைத்துவருவது கூடுதல் சிறப்பாகும். மேலும் விழுப்புரம், காஞ்சிபுரம், செங்கலபட்டு, திருவள்ளூா் போன்ற வட மாவட்டங்களில் தவ்வை வழிபாடு, இன்றளவும் மிகச்சிறப்பாக நடைபெற்றுவருகிறது. ஆகவேதான் மேற்கூறிய புகதிகள் நீா்வளத்துடனும் விவசாயத்திலும் சிறந்து வழங்கிவருகின்றன என்றும் கூறலாம்.

தமிழகத்தில் எங்கெல்லாம் நீா்வளமும் விவசாய வளமும் சிறப்புடன் காணப்படுகறதோ அங்கெல்லாமம தவ்வை வழிபாடு மருக்கும் என்று கூறுவதில் ஐயம் ஏதும் இல்லை. குறிப்பாக தென்மாவட்டங்களில் மிக அரிதாகத்தான் தவ்வை சிற்பங்கள் காணப்படுகிறது. முற்கால பாண்டிய மன்னா்கள் தாய் தெய் வழிபாட்டிற்கு முக்கியத்துவம் தந்து தவிபட்டு வந்துள்ளனா். அவற்றில் தவ்வை வழிபாடு முக்கிய பங்காற்றிவந்துள்ளது. ஒவ்வொரு கிராமங்களிலும் கோவில்கள் நீா் நிலைகளுக்கு அருகில் தான் அமைக்கப்பட்டு வந்துள்ளது. அக்கோவில்களில் தவவைக்கு என்று தனி சன்னதி அமைத்து வழிபட்டு வந்துள்ளனா்

தென்னகத்தில் பிற்கால ஈபண்டியா் காலம் வரை சிறப்பாக செயல்பட்டு வந்த தவ்வை வழிபாடு கி.பி.1310ல் நடைபெற்ற மாலிக்காபூரின் படையெடுப்பிற்குப் பின்பு சீா்குலைந்து கிட்டத்தட்ட 10,000 கோவில்கள் அழிக்கப்பட்டு அங்குள்ள சிற்பங்களை சேதப்படுத்தியதோடல்லாமல் கோவிலில் உள்ள செல்வங்களும் சூரையாடப்பட்டன. தற்போதைய மேற்பரப்பாய்வின் போது கிடைத்துவரும் சிற்பங்கள் சிதைந்த நிலையில் இருப்பதை பாா்க்கும்போது மேற்கூறிய கூற்றை மெய்ப்பிக்கும் விதமாக

அமைந்துள்ளது. எங்களது பாண்டியநாடு பண்பாட்டு மைய கள ஆய்வின் போது நிறைய சிற்பங்களும் கல்லெட்டடுகளும் அதிலும் குறிப்பாக தவ்வை சிற்பங்களும் கிடைத்துள்ளது. இந்த தவ்வை சிற்பங்கள் கிடைத்துள்ள ஊர்கள் அனைத்தும் நீர்வளத்திலும் விவசாயத்திலும் தன்னிறைவு அடைந்த பகுதிகளாகவே செழப்புடன் காணப்படுகிறது.

**முடிவுரை:**

இவற்றின் மூலம் நாம் அறிவது யாதெனில் தவ்வை சிற்பம் எங்கெல்லாம் உள்ளதோ அந்த பகுதிகள் அனைத்தும் நீர்வளத்திலும், விவசாயத்திலும் சிறந்து விளங்குகின்றன. எனவே நமது ஒவ்வொரு கிராமங்களில் உள்ள கோவில்களில் தவ்வை வழிபாட்டை மீண்டும் கொண்டு வந்து முறையான வழிவாடு நடைபெறும் பட்சத்தில் நீர்வளமும் விவசாயமும் பெருகும் என்று உறுதியாக நம்பலாம்.

**நூல்பட்டியல்:**


1. மா.சந்திரமூர்த்தி, தமிழ்நாட்டு சிவாலயங்கள், பக்கம்166.
2. விகடன் "தமிழர்களின் மூத்த தெய்வம் வளத்தின் மூல வடிவம் மூதேவி" அக்டோடபர் 9, 2017.
3. திருக்குறள் - திருவள்ளுவரின் குறள் எண் 167, 617, 936
4. வை.கணபதி ஸ்தபதி, சிற்பச் செந்நூல், மாமல்லபுரம் கலைக்கல்லூரி, மாமல்லபுரம், 1978.
5. P.R.Srinivasan, Bronzas of South Indian, Government Museum, Chennai, 1994.
6. T.A.Gopinatha Rao, Elements of Hindua Iconography.
7. The Law Printing House, Mount Road, Madras, 1914.
8. தொண்டரடி பொய்கை ஆழ்வாரின் - திருவாய்மொழி.
9. ஔவையாரின் தனிப்பாடல்.